1990 மே 5]

ஆனால் நமக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரையும் கூட காலாகாலத்திலே அந்த அளவுப்படி கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் அங்கே அந்த நியாயவிலைக் கடைகளிலே எங்களுக்கு கொடுப்பதே குறைவாகத்தான் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இரண்டு அல்லது ஒரு கிலோ கொடுப்பதையே அவர்கள் சரியான முறைப்படி கொடுப்பதற்காக, பாலிதின் பைகளில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரையைப் பொறுத்த மட்டில் தமிழ்நாடு முழுவதும் காலத்தே கொடுக்கப்படுகிறது. ஆனால் எடைக் குறைவாக எங்கேயாவது இருக்குமேயானால் அது குறித்து தனித்து புகார்கள் கொடுத்தால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. இன்னொரு கருத்தைச் சொன்னார்கள், பாலிதின் பைகளில் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு நுகர்வோர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதுதான் கேள்விக்குறி. காரணம் கொஞ்சம் விலை அதிகமாக விற்கவேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்படுகிறது. அதனாலேதான் அதை நுகர்வோர்கள் அல்லது நுகர்வோர்கள் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளுமா என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இன்றைக்கு நேரிடையாக எடைபோட்டு வழங்கப்படுகிறது. உறுப்பினர் தெரிவித்தபடி எங்கேயாவது எடைக் குறைவாக இருக்குமேயானால் அதைக் குறிப்பிட்டு அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் உடன் கடுமையான நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம்.

* 9862, திரு. எஸ். சிவலோகம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரம் நகரில் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்று அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிதிநிலை நெருக்கடி காரணமாகவும், செலவினில் அரசு சிக்கனத்தைக் கடைப்பிடித்து வருவதாலும், புதிய சரகத் துணைப்பதிவாளர் அலுவலகம் அமைக்க வாய்ப்பில்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகர் கடலூரில் பதிவாளர் அலுவலகம் இருப்பதால் அதைச் சேர்ந்த காட்டுமன்னார் கோவில், சிதம்பரம் தாலுக்காக்களிலிருந்து 45 மைல் பொது மக்கள் செல்லவேண்டியிருப்பதால், பொது மக்கள் நலனைக் கருதி மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ கோட்டத்திற்கு ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் என்கிற அடிப்படையில் இந்த அரசு துணைப் பதிவாளர் அலுவலகங்களை நிர்மாணித்துக் கொண்டு வருகிறது. அதிலே சிதம்பரத்திலே துணைப் பதிவாளர் அலுவலகம் இல்லாமல் அனைவரும் கடலூருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதிலே பல்வேறு சங்கடங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் தூரமும் அதிகம் என்று இன்றைக்கு நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இவைகளையெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் அடுத்த ஆண்டு பரிசிலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைப் பதிவாளர் அலுவலகங்கள் அமைப்பதற்கு அடிப்படை விதிமுறைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் என்கின்ற அடிப்படையில் தமிழகம் முழுவதும் துணைப்பதிவாளர் அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

முந்திரி ஆராய்ச்சிப் பண்ணை.

* 1649. திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் அமைந்துள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதியில், கோவை விவசாயப் பல்கலைக் கழகம் புதிதாக பல கட்டிடங்கள் கட்ட எவ்வளவு ரூபாய் செலவீடப்பட்டது ?